# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

## செய்திக்குறிப்பு

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தனது பல்வேறு செயல்பாடுகளில் துரித மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்யும் பொருட்டு, தகவல் தொழில்நுட்ப உதவியுடன், விண்ணப்பதாரர்கள் பயன்பெறும் வகையில் அவ்வப்போது புதிய நடைமுறைகளை அறிமுகப்படுத்தி வருகிறது.

அவ்வழியில் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் மட்டுமே செயல்படுத்தப்பட்டுவரும் கலந்தாய்வு முறையானது மிகுந்த வெளிப்படைத்தன்மையுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுவருவது விண்ணப்பதாரர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. தற்போதுள்ள நடைமுறையில் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கென தரவரிசைப்படி தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இருமுறை சென்னையில் தேர்வாணைய அலுவலகம் வந்து செல்ல வேண்டிய நிலையுள்ளது.

தேர்வர்களுக்கு இதனால் ஏற்படும் பண விரயம் மற்றும் காலவிரயத்தினை வெகுவாகக் குறைக்கும் வகையில் சான்றிதழ் சரிபார்ப்பிற்குத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் அனைவரும், தங்களது இணையவழி விண்ணப்பத்தில் கோரியுள்ள அனைத்துத் தகுதிகளுக்கான ஆதாரங்கள் அடங்கியமூலச்சான்றிதழ்களை(**Original Certificates)** ஸ்கேன்(Scan) செய்து இணைய வழிமூலம்பதிவேற்றம் செய்யும் முறையினை தேர்வாணையம் தற்போது முதல்முறையாக அறிமுகப்படுத்துகிறது. இந்த நடைமுறை 23.04.2018 அன்று முதல் ஒருங்கிணைந்த குடிமைபணிகள் தேர்வு-II (தொகுதி-IIA) (நேர்முகத்தேர்வு அல்லாத பதவிகள்) ல் அடங்கிய பணிகளுக்கான சான்றிதழ் சரிபார்ப்பிலிருந்து துவங்குகிறது. சான்றிதழ் சரிபார்ப்பிற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள், 04.05.2018 ற்கு முன்னர் தங்களது மூலச் சான்றிதழ்களைத் தேர்வாணைய இணைய தளத்தில் அரசு கேபிள் டிவி நிறுவனம் நடத்தும் அரசு இ-சேவை மையங்கள் மூலமாக பதிவேற்றம் செய்ய வேண்டும்.

இதற்கென மூலச்சான்றிதழ்களின் (Original Certificate) ஸ்கேன்(Scan) படிமத்தின் தரத்தினை உறுதி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தினரால் அனைத்து தாலுக்கா தலைநகரங்களிலும், இயக்கப்பட்டுவரும் இ - சேவை மையங்கள் வழியாக ஸ்கேன்(Scan) செய்து பதிவேற்றம் செய்யும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கென ஒரு சான்றிதழ் ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய ஐந்து ரூபாய் கட்டணமாக பொதுச் சேவை மையங்களில் வசூலிக்கப்படும்.

இப்புதிய நடைமுறையில் இணையவழிமூலம் பெறப்படும் சான்றிதழ்கள் விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பத்தில் தெரிவித்துள்ள கல்வி தகுதிகளின் அடிப்படையில் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டு, தகுதியான விண்ணப்பதாரர்கள் மட்டும் தரவரிசைப்படி கலந்தாய்விற்கு அழைக்கப்படுவர்.

இதனால் தகுதி மற்றும் தரவரிசையின் அடிப்படையில் கலந்தாய்விற்குத் தெரிந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் மட்டுமே ஒருமுறை தேர்வாணைய அலுவலகத்திற்கு மூலச்சான்றிதழ்களுடன் நேரில் வந்தால் போதுமானது. ஆகையால் விண்ணப்பதாரர்களுக்கு ஏற்படும் கால மற்றும் பொருள் விரயம் வெகுவாகக் குறையும்.

<u>இணைய வழிமூலம் பதிவேற்றம் செய்யும் வழிமுறைகள்:</u>

1. மூலச்சான்றிதழ்களின் தெளிவான வண்ணப்படிமம் மட்டுமே பதிவேற்றம் செய்யப்படவேண்டும்.
2. விண்ணப்பதாரர்களின் புகைப்படத்தினையும் பதிவேற்றம் செய்யவேண்டும்.
3. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தினால் நடத்தப்படும் பொதுச் சேவை மையங்களின் பட்டியல் முகவரியுடன் தேர்வாணைய இணையதளத்தில் பட்டியலிடப்பட்டுள்ளது.
4. ஒவ்வொரு தேர்வின் மூலம், சான்றிதழ் சரிபார்ப்பிற்கென தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், குறிப்பிட்ட தேதியிலோ அல்லது அதற்கு முன்னதாகவோ சான்றிதழ்களின் படிமநகலை பதிவேற்றம் செய்ய வேண்டும்.
5. பதிவேற்றம் செய்யும் முன் சான்றிதழ்களின் படிமநகல் தெளிவாக உள்ளதா என்பதைச் சரிபார்த்துக்கொள்ள வேண்டும்.
6. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பத்தில் கோரியுள்ள தகுதிக்கான சான்றிதழ்கள் ஏதேனும் பதிவேற்றம் செய்யப்படாமல் விடுபட்டுப்போனால் அவர் பதிவு செய்துள்ள விவரம் கணக்கில் கொள்ளப்படமாட்டாது. எனவே, அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் அல்லது அவர் பதிவேற்றம் செய்த சான்றிதழ்களின் தகுதிகள் மட்டுமே கணக்கில் கொள்ளப்படும்.
7. விண்ணப்பதாரர்கள் சான்றிதழ்களைப் பதிவேற்றம் செய்யபடவில்லை எனில் அவருக்கு இந்த தெரிவில் கலந்து கொள்ள விருப்பமில்லை என்று கருதி அவரது விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.
8. விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் பதிவு செய்துள்ள விவரங்களுக்கு மட்டுமே சான்றிதழ்களைப் பதிவேற்றம் செய்தால் போதுமானது. கூடுதலான சான்றிதழ்களைப் பதிவேற்றம் செய்திருந்தாலும் அதற்கான கோரிக்கை விண்ணப்பத்தில் இல்லை எனில் அவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.
9. சான்றிதழ் பதிவேற்றம் செய்ய நிர்ணயிக்கப்பட்ட கடைசி நாளுக்குப் பிறகு அதற்கான இணையப் பக்கம் முடக்கப்படும்.
10. இணைய வழியன்றி ஏனைய அஞ்சல் மற்றும் நேரில் பெறப்படும் சான்றிதழ்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

ரா.சுதன், இ.ஆ.ப.,
தேர்வுக்கட்டுப்பாடு அலுவலர்.